வகுப்பு :10

தேர்வு எண்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I

14x1=14

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
2. லத்தீன் அமெரிக்காவுடன் அண்டை நாட்டுடன் நட்புறவு எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?
அ) பிராங்க்ளின் D ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
3. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
4. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?
அ) பாபா தயாள் தாஸ் ஆ) பாபாராம்சிங் இ) குருநானக் ஈ) ஜோதிபா புலே
5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ---------
அ) ஊட்டி ஆ) கொடைக்கானல் இ) ஆனைமுடி ஈ) ஜின்டா கடா
6. கூற்று : இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.
காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றை தடுத்த இந்தியத் துணை கண்டத்தை மித வெப்பமாக வைத்திருக்கிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி
7. இந்தியாவின் தங்க இழைப் பயிர் என் அழைக்கப்படுவது -------
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை
8. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம் ---------
அ) உயிரி சக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்
9. கீழ்க்கண்டவற்றுள் எவை வானுலகு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது?
அ) ஏர் இந்தியா ஆ இந்தியன் ஏர்லைன்ஸ் இ) வாயுதூத் ஈ) பவன்ஹான்ஸ்
10. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது.
அ) ஒரு முறை ஆ) இருமுறை இ) மூன்றுமுறை ஈ) எப்பொழுதும் இல்லை
11. ஒரு மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்?
அ) குடியரசுத்தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஈ) லோக் சபாவின் சபாநாயகர்
12. மாநில அமைச்சரவையின் தலைவர்
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்
13. நாட்டு வருமானம் அளவிடுவது ------
அ) பணத்தின் மொத்த மதிப்பு ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
14. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

பகுதி - II

10x2=20

II. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 28 கட்டாய வினா

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?
17. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18. இராமலிங்க அடிகளின் சீர்த்திருத்தங்களை குறித்து சிறுகுறிப்பு வரைக.
19. இலட்சத்தீவு கூட்டங்கள் பற்றி விவரி?
20. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
21. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
22. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
23. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பட்டியலிடுக.
24. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
25. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?
26. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
28. தங்க மதிப்பீட்டு அளவு என்பது என்ன?

## பகுதி – III

**III. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. கட்டாய வினா 42** **10x5=50**

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    i) -------- ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
    ii) ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் -------- நகரில் அமைந்துள்ளது.
    iii) ஒரு பைசாத் தமிழன் பத்திரிக்கையைத் துவங்கியவர் ----------- ஆவார்.
    iv) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு --------
    v) ------- ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32. **வேறுபடுத்துக:** 1. கடல்மீன்பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு
    2. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்
33. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய் செய்க.
34. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.
35. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
36. இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விளக்குக.
37. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி.
39. **கீழ்க்காணும் பொருளாதார கொள்கைகளை விவரி.**
    1. வேளாண் கொள்கை 2. தொழில் கொள்கை 3. புதிய பொருளாதார கொள்கை
40. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
41. **காலக்கோடு வரைக.**
    1920 முதல் 1940 ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை எழுதுக.
42. **கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**
    (i) துருக்கி (ii) அட்லாண்டிக் பெருங்கடல் (iii) பிரிட்டன் (iv) இத்தாலி (v) ஜப்பான்

## பகுதி – IV

**IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.** **2x8=16**

43. அ) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. (அல்லது)
    ஆ) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.
44. **கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**
    i) காரகோரம் ii) கங்கை ஆறு
    iii) தக்காண பீடபூமி iv) தென்மேற்கு பருவ காற்று வீசும் திசை
    v) மலைக்காடுகள் vi) வண்டல் மண்
    vii) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம் viii) அதிக கல்வி அறிவு பெற்ற மாநிலம்

    (அல்லது)

    i) மேற்கு தொடர்ச்சி மலை ii) மகாநதி
    iii) சோட்டாநாகபுர் பீடபூமி iv) பன்னா உயிர்க் கோள பெட்டகம்
    v) சுந்தரவனக்காடு vi) பாலைவன மண்
    vii) நெய்வேலி viii) அதிக மழை பெறும் பகுதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com